DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.152/2022**

Deposition of witness for Prosecution அ.சா.5

| | | |
|---|---|---|
| பெயர் | : | ராஜேந்திரன் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | சித்திரவேல் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 06.05.2026

எதிரிகள் ஆஜர் இல்லை. அவர்களைப்பொறுத்து குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் சார்பு ஆய்வாளராக காவல் துறையில் பணி புரிந்து தற்போது பணி ஓய்வு பெற்று வசித்து வருகிறேன். கடந்த 31.01.2022 ம் தேதி காலை 10 மணிக்கு திருவேகம்பத்தூர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது முதல் நிலைக்காவலர் ஜோ பிரவின் பதிவு செய்த மனு ரசீது எண். 42/2022 மனுவை பார்வையிட்டு திருவேகம்பத்தூர் காவல் நிலைய குற்ற எண்.7/2022, இதச பிரிவுகள் 294(பி),323, 5065(1), and 4 of TNPHW act ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது.)** பின்னர் வழக்கு கோப்பை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். (**மேற்படி மாதிரி வரைபடம் அ.சாஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 நபர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரிகளை தேடியபோது எதிரிகள் மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்று சமூகம் நீதிமன்றத்தில் சரண் அடைந்துவிட்டார்கள். பின்னர் காயம்பட்ட சாட்சிக்கு சிகிச்சை அளித்த மருத்தவர் திரு. காதர் மைதீன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயத்தின் தன்மை குறித்து கருத்து வழங்க இயலாது சான்றிதழ் பெற்றேன். (**மேற்படி விபத்து பதிவேட்டுடன் கூடிய காயத்தின் தன்மை குறித்து கருத்து வழங்க இயலாது என்ற சான்றிதழ் அ.சாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் புலன்விசாரணையை முடித்து 09.05.2022 ம் தேதி எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி),323, 5065(1), and 4 of TNPHW act ன்படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

சம்பவம் நடந்த 3 நாட்கள் கழித்துதான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம், மனு ரசீது பதிவு செய்து அதனை பார்வையிட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். எனது விசாரணையில் புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் ஏற்கனவே முன்பகை உள்ளதை தெரிந்துகொண்டேனா என்றால் ஆமாம். சம்பவத்தில் பயன்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் கம்பை நான் கைப்பற்றவில்லை. அ.சா.1 என் விசாரணையில் குழந்தையை தாக்கியதாக

குறிப்பிட்டு சொன்னாரா என்றால் இல்லை. அ.சா.3 புகார்தாரரின் அப்பா என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் எதன் அடிப்படையில் இதச பிரிவு 294(பி) பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் மரியாதைக்குறைவாக பேசியதாகவும், அசிங்கமாகவும் பேசியதாகவும் புகாரில் சொல்லியுள்ளார். என்ன அசிங்கமாக பேசினார் என்று புகாரில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் தேவிடியா முண்ட என்று சொல்லியதாக புகாரில் கூறிப்பிட்டுள்ளார். புகாரை யார் எழுதினார் என்று விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. பிரிவு 4 of TNPHW act ன் கீழான குற்றத்திற்கு உடனே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வேண்டுமா அல்லது 3 நாட்கள் கழித்து பதிவு செய்யலாமா என்றால் உடனே பதிவு செய்ய வேண்டும், மனு ரசீது கொடுத்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதால் கால தாமதம் ஏற்பட்டது. அ.சா.1 எத்தனை நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தார் என்றால் சரியாக தெரியவில்லை. சம்பவ சாட்சிகளை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்து கையெழுத்து பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.